**தேயிலை ஆராய்ச்சி சபை - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேயிலை ஆராய்ச்சி சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் , 1993 இன் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சி சபைச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கைக் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை**

| உரிய கணக்காய்வு நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் | தேய்மானம் செய்யப்பட்ட இயந்திரங்களை மறுமதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத் | முழுமையாக தேய்விடப்பட்ட எனினும் |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதியில் கிரயம் ரூபா 410,563,413 ஆன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட கிரயம் ரூபா 210,645,678 ஆன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படடு வருவதுடன், அவற்றிறின் பயனுள்ள ஆயட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான பணிகள் விரைவில் முடிக்கப்படும். | தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை மீள் மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 10 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் சேவைகளை வழங்குதல் உட்பட்ட கொடுக்கல் வாங்கலில் , அறிக்கையிடும் திகதியில் கொடுக்கல் வாங்கலில் இறுதி நிலையைக் கருத்தில் கொண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் தொடர்பான வருமானம் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் , தோட்ட உரிமையாளர்கள் மற்றும் தோட்ட கம்பனிகளிடமிருந்து ஆய்வுக்கூட பரிசோதனைகளுக்கு பெறப்பட்ட மண் மாதிரிகளுக்கு மதிப்பிடப்பட்ட ரூபா 2,822,425 ஆன பகுப்பாய்வுக் கட்டணம் மீளாய்வாண்டில் அறவீடுகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக பணம் பெறுதல் அல்லது பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் இதுவரையில் நடைபெறாததால் அந்த அளவினால் ஆணடிற்கான வருமானம் மிகையாக மதிப்பிடப்பட்டிருந்தது. | பகுப்பாய்வுக் கட்டண அறவீடுகளை அங்கீகரிப்பதில், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 10 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப் படடிருந்ததுடன் தவறுதலாக முடிவு செய்யப்படாத பகுப்பாய்வுக் கட்டணம் 2022 ஆம் ஆண்டில் அறவீடுகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | பெற வேண்டிய ஆய்வுக்கூட பரிசோதனைகளுக் கான வருமானம் கணக்குகளில் பதிவளிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 10 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்கனவே அறவீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகையான்று சேகரிக்கப்படுதல் | ரூபா 328,920 ஆன பெற வேண்டிய பகுப்பாய்வு கட்டணம் 2023 ஆம் ஆண்டில் தீர்க்கப்படும். மேலும் உரிய மாதிரிகளுடன் பணத்தை பெற்று பகுப்பாய்வு | பெற வேண்டிய பகுப்பாய்வுக் கட்டண மீதிகள் கணக்குகளில் பதிவளிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக நிச்சயமற்ற நிலையொன்று இருக்கும்போது சேகரிக்கப்பட முடியாத அல்லது அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் தொலைவில் இருந்தால், அப்பெறுமதி செலவாக அங்கீகரிக்கப்பட வேண்டியபோதிலும் இன்னும் பகுப்பாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படாத 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கணக்கிடப்பட் பகுப்பாய்வுக் கட்டணம் ரூபா 328,920 தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | தலவாக்கலை, இரத்தினபுரி, ஹந்தானை, பசறை மற்றும் கொட்டாவ பிராந்திய அலுவலகங்களில் காணப்பட்ட மஹோகனி, பலா மற்றும் யூகலிப்டஸ் போன்ற 5,654 உயர் நிழல் தாவரங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 18 இன் 13 மற்றும் 16 ஆம் பந்திகளின் பிரகாரம் உயிரியல் சொத்துகளாக அங்கீகரிக்கப்பட்டு அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உயிரியல் சொத்துக்களை அடையாளம் காணும் பணி 2023 யூன் மாதத்தில் நிறைவடைந்துள்ளதுடன் அதன்படி மதிப்பீடு செய்யும் பணிகள் விரைவாக முடிக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், உயிரியல் சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீளாய்வாண்டிற்கான தேய்மானப் பெறுமதி ரூபா 382,787 மற்றும் ஆரம்ப திரண்ட தேய்மானப் பெறுமதி ரூபா 91,712 அதிகமாகக் காட்டப்பட்டிருந்தமையால் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் தேறிய மதிப்பு ரூபா | அதிகமாக கணக்கிடப்பட்ட தேய்மானப் பெறுமதி 2023 இல் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது சரி செய்யப்படும். | கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க தேய்மானம் கணக்கிடப்பட்டு சரியாக கணக்கிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | 474,499 குறைவாக கணககீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 23,873,451 ஆன பேருந்துகள், உபகரணங்கள் மற்றும் சாலைகள் போன்ற 9 வகையான சொத்துகளின் தேய்மானப் பெறுமதி கணிப்பீட்டில் ஏற்பட்ட தவறொன்று காரணமாக ரூபா 313,122 ஆல் அதிகமாகக் கணக்கிடப்படடிருந்தது. | அதிகமாக கணக்கிடப்பட்ட தேய்மானப் பெறுமதி 2023 இல் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது சரி செய்யப்படும். | கணக்கீட்டு கொள்கைக ளுக்கு இணங்க தேய்மானம் கணக்கிடப்பட்டு சரியாக கணக்கிடப்பட வேண்டும் |
| (இ) | இலங்கை தேயிலை சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட 03 வாகனங்கள் ரூபா 3,735,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு தேயிலை ஆராய்ச்சி சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அந்த வாகனங்களின் உரிமையானது தேயிலை ஆராய்ச்சி சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படக்கூடிய நிலையில் நிலைமையில் இல்லாத இந்த மூன்று வாகனங்களை பழுதுபார்த்தலுக்கு உட்படுத்தி கழிவு புகை அறிக்கைகளை பெற்று வருமான அனுமதி பத்திரங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உரித்து மாற்றப்படாத வாகனங்கள் தொடர்பில் கணக்கு பதிவுகளின் மூலம் வெளிப்படுததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் உரித்து துரிதமாக சுவீகரிக்கப்பட வேண்டியதுடன். அதனை மேற்கொள்ளும் வரையில் 03 வாகனங்கள் தொடர்பில் பதிவுகளின் மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, பெருந்தோட்ட கைத்தொழில் | அரசாங்க நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய இந்த நிலுவைகளை ஆராய்ந்து அறிக்கையிட ஒரு குழு | பெற வேண்டிய வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சிற்கு மற்றும் தேயிலை சபைக்கு தேயிலை விற்பனை தொடர்பாக பெற வேண்டிய ரூபா 527,414 மூன்று வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக புனித கும்பஸ் தோட்டத்தின் நானாவித கடன்பட்டோர் கணக்கில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அத்தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நியமிக்கப்பட்டு, அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கு விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிககப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | புனித கும்பஸ் தோட்டத்தின் செக் ரோல் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பண்டிகை முற்பணம் மற்றும் ஏனைய விசேட முற்பணங்கள் அறவிடப்பட முடியாத நிலையில் ரூபா 937,102 ஆன பெற வேண்டிய மீதியொன்று 2017 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கி கொண்டு வரப்பட்டு காணப்பட்டதுடன், அது அறவிடப்படுவதற்கு அல்லது தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை .மேலும் மேற்படி பெற வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 912,696 ஐ இனங்காண்பதற்கான அட்டவணை இருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கு விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிககப்படுவதற்கு தேவையான அறிவுறுத்தல் பெறப்பட்டு மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படும்.. | வழங்கப்பட்ட முற்பணம் மீண்டும் அறவிடப்படுவதற்க அல்லது பதிவளிக்கப்படுவத ற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பொதுத்திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய 03 வருடங்களுக்கு மேற்பட்ட முறையே ரூபா 480,000 மற்றும் ரூபா 699,717 ஆன மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் இயந்திர மயமாக்கல் தொடர்பான விசேட செயற்திட்டம் (Special project on Mechanization) இற்காக 2018 ஆம் ஆண்டில் மேலதிக செலவாக ரூபா 110,224 ஆன தொகை பொதுத்திறைசேரியிடமிருந்து பெற வேண்டிய தொகையொன்றாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத்திகதி வரை அது மீளப் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பொதுத்திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதி தொடர்பாக அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கு விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிககப்பட்டு மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படும்.. | செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய மீதிகள் விரைவாக தீர்க்கப்படுவ தற்கு மற்றும் மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க்ப்பட வேண்டும். |
| (ஆ) | புனித கும்பஸ் தோட்டத்தின் பல்வேறு மொத்த வழங்குநர்களுக்கு 02 முதல் 10 ஆண்டுகள் வரை செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 1,906,780 ஆன கடன் கொடுத்தோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கு | கடந்த சில ஆண்டுகளாக பணம் செலுத்துவதற்கான கோரிக்கைகள் பெறப்படாத கடன் கொடுத்தோர் மீதிகள் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய நிலுவைகள் அல்லது உரிமை கோரப்படாதவை உறுதி செய்யப்பட்டால், அதற்குத் தேவையான சீராக்கம் செய்யப்படு வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது அல்லது உரிமைகோரல் கோரப்படவில்லை என உறுதி செய்யப்பட்டால் அதற்கான தேவையான சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | நடவடிக்கை எடுடக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி.571(3) | 2015 ஆம் வருடத்திலிருந்து 2019 ஆம் வருடம் வரை ஒப்பந்தங்களிலிருந்து பிடித்து வைக்கப்பட்ட ரூபா 449,198 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்தங்களில் நிலவிய குறைபாடுகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை விடுவிக்காது கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டுள் ளது. அவ்வாறு ஒப்பந்தங்களில் உள்ள குறைபாடுகள் சரி செய்யப்படாவிட்டால், அந்த தக்கவைப்பு பணத்தில் குறிப்பிட்ட குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள துடன் நி.பி. 571 (3) இன் படி மீதமுள்ள தொகை மூன்று மாதங்களுக்குள் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தங்களில் நிலவிய குறைபாடுகள விரைவில் சரி செய்யப்பட்டு தக்கவைப்புகள் தீர்க்கப்படுவ தற்கு அல்லது உரித்து கோரப்படாமை உறுதிப்படுத்தப்பட் டால் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி.756(9) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படுவதற் கான காலப்பகுதியின் பிரகாரம் சபையின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையானது எதிர்வரும் நிதியாண்டில் யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2021 மற்றும் 2022 ஆம் வருடங்களின் அவ்வறிக்கைகள், 2023 ஒக்டோபர் 16 வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு முடிக்கப்பட்டு காணப்பட்ட பழுதடைந்த பொருட்கள் 2022 திசெம்பர் 22 இல் ஏலம் விடப்பட்டிருந்ததடன் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது. 2022 ஆம் ஆண்டு தொடர்பான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2023 ஆகஸ்ட் 31 அன்று நிறைவடையும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 77,885,774 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 77,477,947 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 155,363,721 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் புனித ஜோக்கின் மற்றும் புனித கூம்பஸ் தோட்டங்களில் ரூபா 108,939,119 ஆன தேறிய இலாபமொன்று காணப்பட்டமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டபோது தேயிலை விற்பனை வருமானம் 110 சதவீதத்தினாலும், நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் 160 சதவீதத்தினாலும், கொழுந்து விற்பனை வருமானம் 69 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன் முறையே பிரயாணச் செலவு மற்றும் வழங்கல் மற்றும் நுகர்வச் செலவுகள் 32 சதவீதத்தினால் மற்றும் 91 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்து மற்றும் விரைவுச் சொத்து விகிதம் முறையே 4:1 மற்றும் 3:1 ஆக இருந்ததுடன் கடந்த வருடத்தில் அவ்விகிதங்கள் 3:1 மற்றும் 2:1 ஆக

இருந்தன. 2021 மற்றும் 2022 வருடங்களில் இருப்பு மற்றும் குறுங்கால முதலீடுகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 168,310,718 மற்றும் 219,821,063 ஆக இருந்தமை, அதாவது மிகை மூலதன நிலைமையொன்று காரணமாக இவ்விகிதங்கள் உயர்ந்த மதிப்பொன்றை எடுத்திருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் விசேட செயற்திட்டத்தின் கீழ் காலநிலை மாற்றத்திறகான தேயிலை செடியின் தகவமைப்பு பதில்களை ஆய்வு செய்வதற்காக 2017 நவம்பர் 24 ஆந் திகதி ரூபா 12,554,583 செலவிடப்பட்டு இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உபகரணம், (Walk in Type Environmental Controlled Facility) எதிர்பார்த்த மாதிரிக்கு பொருந்தாமை மற்றும் அதன் செயற்பாடு எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படாமையின் அடிப்படையில் 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும், ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்தப்படுவதற்கு முடியாமல் விளைவற்றதாகக் காணப்பட்டது. | இந்த இயந்திரம் பரிந்துரைக்கப்பட்ட கொள்முதல் செயல்முறையின்படி செய்யப்பட்டுள்ளதுடன் அதை கொள்வனவு செய்வதற்காக 2018 ஜனவரி 05 உள்ளூர் முகவர் மற்றும் சபையால் ஒப்பந்த உடன்படிக்கை கையெழுததிடப்பட்டது. . இயந்திரம் நிறுவிய பினனர் குறிப்பிட்ட செயல்திறனுடன் இணங்கவில்லை என் தாவர உயிரியல் துறையினால் தெரிவிக்கப்பட்டதுடன் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் விவரக்குறிப்புகளுக்கு இணங்காமை தொடர்பாக வழங்குநரால் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மீறப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பில் வெளிநாட்டு விநியோகஸ்தர் மற்றும் உள்ளூர் முகவருக்கு எழுத்துமூல அறிவிப்புகள் பல தடவைகள் வழங்கப்பட்ட போதிலும், தேவையான விவரக்குறிப்புகளுக்கு இணங்க இயந்திரம் நிறுவப்படாததால் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. முதலாம் மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கு எதிராக ரூபா 12,554,583 மற்றும் குறித்த தொகை செலுத்தப்படும் வரை சட்ட வட்டிக்கான உத்தரவைப் பெறுவதற்காக, கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் | சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தி நட்டத்தினை அறவிட வேண்டும். |

வழக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (NERD) இருந்து தொழில்நுட்ப அறிவு கொண்ட அதிகாரி உட்பட ஒரு குழுவை நியமித்து, இது தொடர்பான கொள்முதல் தொடர்பான ˈத விரிவான அறிக்கையைப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முறையே காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனிக்கு மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் சபையினால் ரூபா 72,956,788 செலவிடப்பட்டு வலஹந்துவா, தெனியாய மற்றும் கொட்டாவ பிரதேச செயலக அலுவலகக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு சபையின் சொத்துக்களாகக் கணக்கிடப்பட்டிருந்தது. அந்த காணி சபையின் பெயரில் மாற்றப்படாதிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் மண் மற்றும் தாவர போஷாக்கு ஆய்வு கூடமும், வலஹந்துவ காணியுடன் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதால், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் கட்டளை பெறப்படும்வரை குறித்த காணியின் சட்டரீதியான உரிமை தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.<br><br>கொட்டவ மதியுரை மற்றும் வியாபிப்பு நிலையம் அமைந்துள்ள காணி அபிவிருத்தி செய்யப்பட்டு சபையினால் பயன்படுத்தும் பகுதியும் அரசுக்கு சொந்தமான நிலம் என்பதால், நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெறுவதற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் காணி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனிக்குரிய தெனியாய தோட்டத்தின் மேல் பகுதியில் 5 ஏக்கர், 2 ரூட், 1.95 பேர்ச் | காணிகளின் உரிமையை உடனடியாக கையகப்படுத்துவதற்கு அல்லது குத்தகை அடிப்படையில் அவற்றைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதுடன் அது முடியும் வரை, மூன்று காணிகள் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பரப்பளவான காணித்துண்டின் சட்ட ரீதியான உரித்தினை சுவீகரிப்பது தொடர்பாக மதிப்பிட்டுத் திணைக்களத்திடமிருந்து தேவையான மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டு, அவ்வறிக்கை தற்போது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | முழுமையான சம்பளத்துடனான வெளிநாட்டு கல்வி விடுமுறை பெற்று வெளிநாடு சென்று மீள சேவைக்கு வருகை தராத மற்றும் சேவைக்கு வருகை தந்த பின்னர் கட்டாய சேவைக்காலத்தை முடிப்பதற்கு முன்னர் சேவையை விட்டுச் சென்ற 04 உத்தியோகத்தர்களினால் 2005 ஆம் வருடம் முதல் 2009 ஆம் வருடம் வரை சபையுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை மீறப்பட்டதால் குறித்த பிணைமுறி பெறுமதியான ரூபா 15,054,891 ஆன தொகை 2022 ஆம் வருட இறுதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்க வில்லை. | பிணை முறி ஒப்பந்தங்களை மீறி பணிக்கு திரும்பாத 04 அதிகாரிகளுக்கு எதிராக நிறுவனத்தினால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.<br><br>முன்னாள் ஆராய்ச்சி உதவியாளர் வெளிநாடு சென்றுள்ளார். கொழும்பு மாவட்ட நீதிமன்றில் இலக்கம் DMR/4019/11 இன் கீழ் பிணையளிப்பவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இறுதியில் தீர்ப்பளிக்கப்பட்டபோது அந்த அதிகாரியின் சார்பாக நிறுவனம் செலவழித்த தொகை மற்றும் சட்டக் கட்டணத்துடன் அந்த நிறுவனத்திற்கு சட்டப்பூர்வ வட்டியும் செலுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பை எதிர்த்து அப் பிணையாளரினால் மேல்முறையீடொன்று தாக்கல் செய்யப்பட்டது.இந்த வழக்கு 2023.11.23 அன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு உள்ளது.<br><br>முன்னாள் ஆராய்ச்சி உதவியாளருக்கு எதிராக கண்டி மாவட்ட நீதிமன்றில் இலக்கம் DMR/1409/13 இன் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.அவர் மரணித்து விட்டார். உத்தரவாதம் அளித்தவர் மீதான வழக்கு | குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிய மாற்று செயல்முறைகளை ஆராய்ந்து உரிய தொகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொடர்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு 2023.08.25 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு உள்ளது.<br><br>முன்னாள் ஆராய்ச்சி உதவியாளர் வெளிநாடு சென்றுள்ளார். தற்போது Lethbridge College, Faculty of Agriculture, Canada கல்லூரியில் ஆலோசகராகப் பணிபுரிகின்றார் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 2022.01.10 இல் மேற்படி முகவரிககு பணத்தை செலுத்துமாறு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>முன்னாள் தகுதிகாண் அதிகாரி 2002.10.17 முதல் 2003.10.16 வரை ஜப்பானில் உள்ள Tokiyo Institute of Technology இற்கு பயிற்சிக்காகச் சென்றார். நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் 3126 இலக்கத்தின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு 11 முறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும், அதிகாரி அந்த வழக்குகளில் எதிலும் ஆஜராகவில்லை. | |
| (இ) | 2017, 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் இறப்பர் மரங்கள் நடுதல், தேனீர்க் கடையொன்றுக்கு பதப்படுத்தப்பட்ட கொள்கலன் காட்சி அறையொன்றை அமைத்தல் மற்றும் கோவைகள் இறாக்கையொன்றை தயார் செய்தல் ஆகிய பணிகள் தொடர்பான நடைமுறை வேலைகள் கணக்கில் காணப்பட்ட ரூபா 1,296,164 | இறப்பர் மரங்கள் நடுதல் பணிகள் நிறைவடைந்துள் ளதுடன், தோட்டத்தில் இருந்து அதற்கான பணி நிறைவு சான்றிதழ் பெறப்பட்டு கணக்கியலில் ஏற்பட்டுள்ள இந்த பிழையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொள்கலனை வழங்குமாறு அல்லது ஒரு மாதத்திற்குள் தொகையை செலுத்துமாறு வழங்குநருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய காலத்திற்குள் பணம் செலுத்தத் | கொள்கலன் காட்சி அறையொன்றை உடனடியாக அமைத்தல் அல்லது பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பிற வேலைகளுக்கான பணி நிறைவுச் சான்றிதழ்களைப் பெற்று கணக்குகளில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆனது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், பணிகள் முடிக்கப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவறினால் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோவைகள் இறாக்கை யொன்றை தயார் செய்தல் நிறுவன ஊழியர்களை பணியமர்த்துவதன் மூலம் அதே ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளதுடன் 2023.07.31 ஆம் திகதிக்கு முன்னர் பணி முடித்ததற்கான சான்றிதழ் வழங்கப்பட்டு இந்த தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சீராக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபைக்கான முகாமைத்துவ தகவல் அமைப்பை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக சிறீலங்கா டெலிகொம் சர்வீஸ் லிமிடெட்டிற்கு 2020 ஏப்ரல் 22 ஆம் திகதி ரூபா 4,228,700 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி ரூபா 1,141,749 ஆன முற்பணத் தொகையொன்று அந்நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. சேவை வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர் ஆவணங்களின்படி, கட்டளை வழங்கப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டிய போதிலும், 2023 யூன் 30 வரை 3 ஆண்டுகளுக்கு மேலாகியும் அதன் முன்னேற்றம் 51 சதவீதம் மட்டுமே காணப்பட்டமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | 2020 ஏப்ரல் 22 தேதியிட்ட கொள்முதல் கட்டளை கையளிக்கப்பட்ட காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட தொற்றுநோய் நிலைமை காரணமாக, இந்த செயற்திட்டத்தின் பணிகளை எதிர்பார்த்தபடி முடிப்பதற்கு முடியவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட வழங்குநர் நிறுவனம் 2023 யூன் 30 வரை மேலும் செயல்திறன் பத்திரத்தை நீட்டித்து இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் 2023 யூலை 31 இல் பூர்த்தி செய்து ஒப்படைக்கப்படும் என வழங்குநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 யூன் 30 முதல் ஒப்பந்தத்தின்படி தாமதக் கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ தகவல் அமைப்பை விரைவில் முடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான | லாமிலியர் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட | இந்த சொத்தை திறம்பட |

| | | | |
|---|---|---|---|
| | தலவாக்கலையில் உள்ள லாமேலியர் தோட்டத்தின் 1.367 ஹெக்டேர் பரப்பளவுள்ள தொழிற்சாலை மற்றும் அனைத்து கட்டிடங்களும் 2003 ஆம் ஆண்டில் ஒரு தனியார் கம்பனிக்கு 50 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் வாடகையை செலுத்தாததால், 2016 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட மீண்டும் கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் அது ஆனால் கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2023 யூன் 07 வரை அதாவது 07 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் அச்சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றதாக காணப்பட்டன. | தொழிற்சாலை, தோட்ட மேற்பார்வையாளர் அலுவலகம் மற்றும் ஏனைய அனைத்து கட்டிடங்களும் 2007 இல் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து கொள்வனவு செய்யப்படிருந்ததுடன்,இச் சொத்தக்கள் சபைக்குச் சொந்தமான சட்டரீதியான சொத்துக்களாகும்.<br><br>இது தொடர்பாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைசசினால் 2023 மே 24 ஆம் திகதி சபைக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் அரச காணிகளை அப்புறப்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால், எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் மற்றும் ஆலொசனைகள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்து வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டு பரிந்துரைகளின்படி, தொழிற்சாலையின் நானாவித வருமானங்களின் மூலம் அதன் எவ்வித செலவுகளையும் செய்வதற்கு முடியாதிருந்ததுடன் ரூபா 500,000 ஆன காப்பீட்டு வரம்பை மீறினால் அதே நாளில் அல்லது அவ்வாறு இல்லாவிட்டால் வாரத்திற்கு ஒரு முறையாவது அல்லது வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும், 2022 திசெம்பர் மாதத்தில் புனித கும்பஸ் தொழிற்சாலையில் தினசரி சேகரிக்கப்பட்ட பணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி | தோட்டத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் பணத்தை எவ்வித தாமதமும் இன்றி வங்கியில் செலுத்துமாறு தோட்ட அத்தியட்சகருக்கு விரிவான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதுடன், தோட்டம் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கவும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. | சபையின்உள்ளகக் கட்டுப்பாட்டுப் பரிந்துரைகளின் படி, வசூலிக்கப்படும் பணத்தை முறையாக வங்கிக்குச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, இது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கணக்காயிவின்போது , ரூபா 1,268,935 ஆன சேகரிக்கப்பட்ட பணம் , அன்றைய தினம் முதல் வைப்புச் செய்யப்பட்ட திகதி வரை 5 முதல் 16 நாட்கள் வரையான காலமொன்று தொழிற்சாலையில் தக்கவைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் 27(1) பிரிவின் கீழ் தேயிலை ஆராய்ச்சிச் சபையின் ஊழியர் சேம நிதியம் 1959 யூன் 01 ஆம் திகதியிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட சேம நிதியமொன்றாக 2014 ஒக்டோபர் 30 ஆம் திகதி தொழில் ஆணையாளரினால் சான்றுபடுத்தப்பட்டிருந்தது. இச் சேம நிதியத்தின் முகாமைத்துவச் சட்டக் கோவையின் 4(i) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபையானது, தேயிலை ஆராய்ச்சி சபையின் பணிப்பாளர் (நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் தலைவர்), நிதியத்தின் தலைவரினால் பணிப்பாளர்களில் பெயரிடப்பட்ட 02 உறுப்பினர்கள் மற்றும் நிதியத்தின் உறுப்பினர் சபையில் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் இருவரும், இலங்கை தேயிலை சபையினால் பெயரிடப்பட்ட நிதியத்தின் உறுப்பினர் அல்லாத இரண்டு அதிகாரிகளும் உட்பட 07 உறுப்பினர்களைக் | 2021.12.31 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுச்சபை கூட்டத்தில் நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கத்துவர்களின் எண்ணிக்கையை திருத்தி அமைப்பதற்கு உரிய முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அந்த திருத்தப்பட்ட விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரத்திற்காக 2022 யூன் 23 மற்றும் 2022 யூலை 25 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் தொழில் ஆணையாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அந்த திருத்தங்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. இருப்பினும், சேமலாப நிதியம் தொடர்பான முடிவுகள் பொதுச் சபையால் எடுக்கப்படுகின்றன. மீண்டும் தொழிலாளர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரத்தைப் பெறுவதற்காக திருத்தக் கடிதம் தயார் செய்யப்பட்டுள்ளது.<br><br>ரிக்கப்பட்டுள்ளதுடன ட் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு கூடிய விரைவில் திருத்தப்பட்ட | விதிக் கோவை திருத்தம் செய்யப்படுவதற்கு அல்லது அது முடியாவிட்டால், ஏற்கனவே உள்ள விதிகளின்படி உறுப்பினர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டதாக இருக்க வேண்டிய போதிலும், தலைவரினால் தேயிலைச் சபையின் உறுப்பினர் 2023 யூலை 31 கணக்காய்வுத் திகதி வரையில் நம்பிக்கைப்பொறுப்பு சபைக்கு நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | |
| (ஆ) | புனித கும்பஸ் தோட்டத்தின் உள்ளக கட்டுப்பாட்டு நலிவுகள் காரணமாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது சபையின் கணக்காளர் இருவர் மற்றும் மூன்று தொழிற்சாலை அதிகாரிகளினால் ஏற்பட்டிருந்த நிதி மோசடி காரணமாக இழக்கப்பட்ட தொகையாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,299,327 ஆன கடன்பட்டோர் மீதியொன்று 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற போதிலும் உரிய விசாரணை பணிகள் நிறைவு செய்யப்பட்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து அத்தொகையை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017/2018 ஆம் ஆண்டுகளில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான புனித கும்பஸ் தோட்டத்தின் அலுவலகத்தின் தேநீர் கடையில் தேநீர் விற்பனையின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,073,432.25 ஆன நிதி மோசடி தொடர்பாக மற்றும் தோட்ட அலுவலகத்தில் நடப்புக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்தபோது மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,207,571.27 ஆன நிதி மோசடி தொடர்பாக. 104 (4) இறுதி அறிக்கைகளின்படி மேற்படி நிதி முறைகேடுகளுக்கு காரணமான அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இரண்டு வழக்குகள் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தனித்தனியாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br>அத்துடன், இது தொடர்பாக முறையே கொழும்பு வர்த்தக குற்றப் புலனாய்வுப் பணியகத்தினாலும் மற்றும் நுவரெலியா விசேட குற்றப் புலனாய்வுப் பணியகத்தினாலும் குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.<br>தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினாலும் இது தொடர்பாக பின் தொடரல் நடவடிக்கைகள் எடுககப்பட்டள்ளது. | நிதி மோசடி தொடர்பான விசாரணைகளை தாமதமின்றி முடித்து சட்ட நடவடிக்கையை துரிதப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுள் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகள் 36 நிலவிய போதும் மீளாய்வாண்டில் அவற்றுள் 23 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. அவ்வெற்றிடங்களில் 04 பிரிவுத் தலைவர் பதவிகளும் 11 பிரதான ஆராய்ச்சி அலுவலர் பதவிகளும் 05 பிரதான ஆலோசனை அலுவலர் பதவிகளும் உள்ளக பதவியுயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டிய பதவிகள் என்பதுடன் 03 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக இப்பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. | பிரிவுத் தலைவர் பதவி உள்ளக பதவி உயர்வு என்பதுடன் அப்பதவிக்கு தேவையான தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிர்காலத்தில் அங்கீகாரம் பெறப்பட்டு, உளளக விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் பிரதான ஆலோசனை உத்தியோகத்தர் பதவிகளும் உள்ளக பதவி உயர்வுகள் என்பதுடன் அப்பதவிகளுக்காக தற்போது உள்ளக ரீதியில் தகைமைகளை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் இருக்கவில்லை. | வெற்றிடங்கள் காணப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அத்தியாவசிய பதவிகளுக்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டியதுடன் தேவையற்ற பதவிகளாக இருப்பின் அவற்றை இரத்து செய்ய வேண்டும். |
| (ஆ) | சபையின் செயற்பாட்டு மற்றும் ஆலோசனை அலுவலர் பதவிகளில் 52 சதவீதமும் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பமல்லாத முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் 42 சதவீதமும் ஆரம்ப நிலை (பயிற்சி) பதவிகளில் 55 சதவீதமும் ஆரம்ப நிலை (பயிற்சி அல்லாத) பதவிகளில் 46 சதவீதமும் ஆன வெற்றிடங்கள் நிலவின. மேலும் சிரேஷ்ட ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அலுவலர் 17 பதவிகள் மற்றும் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அலுவலர் 27 | சிரேஷ்ட ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அதிகாரி பதவிகள் மற்றும் செயல்பாட்டு மற்றும் அமுலாக்க வகை பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான ஒப்புதலைப் பெறுவதற்கு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் மூலம் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவின் பதவியான முகாமைத்துவ உதவியாளர (சேமிப்பகம்) என்ற பதவியில் பணியமர்த்தப்படுவதற்கு செய்தித்தாள் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு நேரமுகப் பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு | வெற்றிடங்கள் காணப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அத்தியாவசிய பதவிகளுக்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டியதுடன் தேவையற்ற பதவிகளாக இருப்பின் அவற்றை இரத்து செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதவிகள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை முறையே 5 மற்றும் 14 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன.இப்பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் நிறுவனத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதில் நேரடியாகப் பாதிக்கின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொடர்பான இறுதிப் பரிந்துரைகள் சபைக்கு அனுப்பி ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஒப்புதல் கிடைத்தவுடன், நியமனக் கடிதங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தொழில்நுட்பம் சாராத பதவிகளில் தேவையான பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் தற்போது ஆட்சேர்ப்பு பணியை தொடங்குவதற்கு தேவையான ஒப்புதல் இதுவரை கிடைக்கப்பெறாததால், ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிக அல்லது அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 180 நாட்களுக்கு மேற்பட்ட 93 ஊழியர்களுக்கு 2014 ஒக்டோபர் 24 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தும் அந்த ஊழியர்கள் சபையின் பதவியணிக்கு உள்ளடக்கப்படுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப சேவை பிரிவு பதவிகளுக்காக தொழிலாளர் படையணி மூலம் மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | 2014 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஊழியர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவத்திற்கான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை உருவாக்குவது தொடர்பான நடைமுறைக் கைநூல் தயாரிக்கப்பட்டு | நடைமுறைக் கையேட்டைத் தயாரிப்பதற்கு இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதுடன், அந்த நிறுவனத்தால் கோரப்பட்ட முற்பணத் தொகை பெறுகை நடைமுறைக் கோவைக்கு | மனித வள முகாமைத்துவத்திற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமறைகளை உருவாக்குவது |

| | | |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை மீளாய்வாண்டிலும் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. | இணங்காமையால் நடைமுறைக் கையேட்டைத் திருத்துவதற்கு உள்ளகக் குழுவொன்று நியமிக்கப்படுவதற்கு மற்றும் வெளியார் நிபுணர் ஒருவரிடம் ஆலோசனை பெறுவதற்கு தேயிலை ஆராய்ச்சி சபை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, மிகுதி பணிகள் மூன்று மாதங்களிற்குள் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.. | தொடர்பான நடைமுறை கையேட்டைத் தயாரிப்பது தாமதமின்றி முடிக்கப்பட வேண்டும். |